RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING


www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 51 | பிப்ரவரி.27 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# தோழர் நல்லகண்ணு உடலுக்கு 72 குண்டுகள் முழங்க தமிழக அரசு மரியாதை!





சென்னை: பிப்.27-

மறைந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு உடலுக்கு 72 துப்பாக்கி குண்டுகள் முழங்க அரசு சார்பில் முழு மரியாதை செலுத்தப்பட்டது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் மற்றும் சுதந்திர போராட்ட வீரருமான நல்லகண்ணு நேற்று வயது மூப்பின் காரணமாக உயிரிழந்தார். அவருக்கு வயது 101 . சென்னை தியாகராய நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்தில் அவரது உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர், அரசியல் கட்சி தலைவர்கள், திரையுலகினர் என அனைவரும் நல்லகண்ணு உடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து, மலர் வளையம் வைத்து மறைந்த நல்லகண்ணு உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி செலுத்தினார். பின்னர், 72 குண்டுகள் முழங்க 24 காவலர்கள் 3 முறை வானத்தை நோக்கி சுட்டனர். முதல்வர் ஸ்டாலின் தலைமையில் தலைவர்கள் நல்லகண்ணுக்கு 'வீர வணக்கம்' செலுத்தினர்.

நல்லகண்ணு இறப்புக்கு பிறகு தன்னுடைய உடலை மருத்துவமனைக்கு தானமாக வழங்க விருப்பம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், நல்லகண்ணுவின் உடல் அவரது விருப்பப்படி சென்னை சென்ட்ரலில் உள்ள ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு தானமாக ஒப்படைக்கப்படுகிறது. நல்லகண்ணுவின் இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று வீரவணக்கம் செலுத்தி அவருக்கு பிரியாவிடை கொடுத்தனர்.

## கரூர் தவெக கூட்டத்தில் கொடிக் கம்பம் சாய்ந்து விபத்து : நிர்வாகி காயம் 2 பிரிவுகளில் வழக்கு

கரூர்: பிப்.27-

தவெக கொள்கை விளக்க கூட்டத்தில் கொடிக் கம்பம் சாய்ந்ததில் நிர்வாகி காயமடைந்தார். இது தொடர்பாக தவெக நிர்வாகி மீது இரு பிரிவுகளில் வழக்கு பதிவு செயயப்பட்டுள்ளது.

கரூர் 80 அடி சாலையில் தவெக கொள்கை விளக்க பொதுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதற்காக கரூர் மாநகராட்சியின் அனுமதியின்றி அப்பகுதியில் விளம்பர பதாகைகள் வைக்கப்பட்டிருந்தன. பொதுக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அப்பகுதியில் திடீரென மழை பெய்தது.

கட்சியின் பேச்சாளர் நாஞ்சில் சம்பத் இரவு பேசிக் கொண்டிருக்கும்போது மேடைக்கு அருகே நடப்பட்டிருந்த கொடிக் கம்பம் மின் வயரில் உரசியதில் கொடி தீப்பற்றியது. உடனே அங்கிருந்தவர்கள் கொடிக் கம்பத்தை அகற்ற முயற்சித்தபோது, கொடிக் கம்பம் அப்படியே மேடை மீது சாய்ந்தது.

கட்சியின் பேச்சாளர் ஜெகதீசபாண்டியன் தலை மீது கம்பம் விழும்போது, அதனை அவர் கைகளால் தடுத்த நிலையில், அவரது தலையில் லேசான காயம் ஏற்பட்டது. இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இது குறித்து மனோஜ் குமார் என்பவர் அளித்த புகாரின்பேரில் தவெக கரூர் மேற்கு நகர செயலாளர் சரவணன் மீது கரூர் மாநகராட்சியின் அனுமதியின்றி விளம்பர பதாகைகள் வைத்தது, ஜெனரேட்டர் வைத்தது, கொடிக் கம்பம் விழுந்து காயம் ஏற்படுத்தியதால் பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தது, பிஎன்எஸ்எஸ் 289 பிரிவு தீப்பற்றக் கூடிய பொருட்களை பயன்படுத்தி கவனக்குறைவாக செயல்பட்டது ஆகிய இரு பிரிவுகளின் கீழ் கரூர் நகர போலீஸார் இன்று (பிப்.26) வழக்கு பதிவு செய்துள்ளனர்.

## கட்சி ரோடு ஷோ விதிகளுக்கு எதிராக வழக்கு தொடர்ந்த தவெகவுக்கு ஐகோர்ட் சரமாரி கேள்வி



சென்னை: பிப்.27-

கட்சி ரோடு ஷோக்களுக்கான அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை ரத்து செய்யக் கோரி தவெக சார்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

கரூரில் தவெக சார்பில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 உயிரிழந்தனர். இதையடுத்து, உயர் நீதிமன்ற உத்தரவின்படி, அரசியல் கட்சிகள் ரோடு ஷோ நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்த தமிழக அரசு, ஜனவரி 5ஆம் தேதி அரசிதழில் அதை வெளியிட்டது.

இந்நிலையில், அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை ரத்து செய்யக் கோரி தவெக இணை பொதுச் செயலாளர் சி.டி.ஆர். நிர்மல்குமார் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு, தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, 'பொதுக் கூட்டங்கள் நடப்பதற்கு 30 நாட்களுக்கு முன் அனுமதி கோரி விண்ணப்பிக்க வேண்டும் என்ற விதி தன்னிச்சையானது. அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்கு முன்னுரிமை அளிப்பது பாரபட்சமானது. நிகழ்ச்சி பாதுகாப்பு தொடர்பாக அரசு மேற்கொள்ள வேண்டிய பொறுப்புகள் கட்சிகள் மீது திணிக்கப்படுகின்றன' என த.வெ.க. தரப்பில் வாதிடப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், 'இந்த விதிகளில் என்ன தவறு உள்ளது? கரூரில் நடந்த வேதனைக்குரிய சம்பவத்தை தொடர்ந்து உயர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில்தான் இந்த வழிகாட்டு விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. வருமான வரி விலக்கு பெறுவதற்காக பல கட்சிகள் காளான்கள் போல துவங்கப்படுகின்றன. அவை தேர்தல்களில் போட்டியிடுவதில்லை. பல தேர்தல்களில் போட்டியிட்டு, எம்பி எம்எல்ஏக்களை பெற்ற நீண்ட வரலாறு கொண்ட கட்சிகளுக்கு முன்னுரிமை கொடுப்பதில் என்ன தவறு?' எனக் கேள்வி எழுப்பினார்.

மேலும், தவெக இது எத்தனை தேர்தல்களில் போட்டியிட்டுள்ளது எனவும் தலைமை நீதிபதி கேள்வி எழுப்பினார்.

அரசுத் தரப்பில், 'இந்த வழிகாட்டி வழிமுறைகளை பின்பற்றி தவெக இரண்டு கூட்டங்களை நடத்தியுள்ளது. இந்த நிபந்தனைகளின்படி 5000க்கும் மேற்பட்டோர் கலந்துகொள்ளும் கூட்டங்களுக்கு விதிகள் வகுக்கப்பட்டுள்ளதால், அதை தவிர்க்க 4,998 பங்கேற்பாளர்கள் என கூறி விண்ணப்பிக்கின்றனர்.

ஒரே நாளில் ஒரே இடத்துக்கு பல கட்சிகள் விண்ணப்பிக்கும் போது, அங்கீகரிக்கப்பட்ட கட்சிக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. இல்லாவிட்டால் முதலில் வருவோருக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது' என விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், 'பெரும்பாலான அரசியல் கட்சிகள் இந்த வழிகாட்டு விதிமுறைகளை ஏற்றுள்ள நிலையில், மனுதாரர் கட்சி மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளது. சேலத்தில் வெயில் காரணமாக ஒருவர் இறந்த பிறகுதான், வேலூரில் நடந்த நிகழ்ச்சியில் மேற்கூரை அமைத்துள்ளனர்' என தெரிவிக்கப்பட்டது.

ஆன்லைனில் விண்ணப்பங்களை பெறுவது குறித்து அரசு ஏன் பரிசீலிக்க கூடாது என அரசுத் தரப்பை கேட்ட நீதிபதிகள், தவெக மனுவுக்கு மூன்று வாரங்களில் பதிலளிக்க தமிழக அரசுக்கு உத்தரவிட்டனர்.

## அமைச்சர் வருகை தாமதம்: சிவகங்கையில் அரசு விழாவில் பொதுமக்கள் மற்றும் மாணவிகள் அவதி








சிவகங்கை பிப்.27-

சிவகங்கையில் நடைபெற்ற அரசு விழாவிற்கு அமைச்சர் தாமதமாக வந்ததால், அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பாதியிலேயே வெளியேறிய சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நிகழ்வின் பின்னணி:

சிவகங்கை வட்டாரப் போக்குவரத்து அலுவலக மைதானத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள தானியங்கி ஆய்வு மையத்தை, தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் காலை காணொளிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார். முதலமைச்சர் குறிப்பிட்ட நேரத்தில் திட்டத்தைத் தொடங்கி வைத்த நிலையில், இவ்விழாவில் நேரில் பங்கேற்க வேண்டிய கூட்டுறவுத்துறை துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் நீண்ட நேரமாகியும் வரவில்லை.

வெறிச்சோடிய விழா மேடை:அமைச்சரின் வருகைக்காக நீண்ட நேரம் காத்திருந்த பொதுமக்கள் மற்றும் பயனாளிகள் ஒவ்வொருவராகக் கலைந்து செல்லத் தொடங்கினர். ஒரு கட்டத்தில் பொறுமையிழந்த சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலர் செல்வசுரபி, வருவாய் கோட்டாட்சியர் ஜெபி கிரேசியா உள்ளிட்ட அரசு அதிகாரிகளும் விழா மேடையை விட்டு வெளியேறினர்.மாணவிகள் சோர்வு:குறிப்பாக, விழாவின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுவதற்காகக் காலை 9 மணிக்கே வரவழைக்கப்பட்ட பள்ளி மாணவிகள், அமைச்சர் வராததால் வெயிலிலும் பசியிலும் நீண்ட நேரம் காத்திருந்து மிகுந்த சோர்வடைந்தனர். இது அங்கிருந்தவர்களிடையே மிகுந்த வேதனையை ஏற்படுத்தியது.

பொதுமக்கள் அதிருப்தி:இது குறித்து அப்பகுதி மக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் கூறுகையில்: "அமைச்சர் பெரியகருப்பன் சிவகங்கை பகுதி நிகழ்வுகளைப் புறக்கணிப்பதையும், மக்களைக் காக்க வைப்பதையும் வாடிக்கையாகக் கொண்டுள்ளார். அவர் தனது சொந்தத் தொகுதியான திருப்பத்தூருக்குக் காட்டும் அக்கறையைச் சிவகங்கை நகருக்குக் காட்டுவதில்லை," எனப் புகாரளித்தனர்.அரசியல் தாக்கம்:அமைச்சரின் இத்தகைய செயல்பாடுகளால் சிவகங்கை பகுதியில் ஆளுங்கட்சியின் மீதான அதிருப்தி அதிகரித்து வருவதாகவும், இது வரும் தேர்தல்களில் வாக்கு வங்கியைப் பாதிக்கக் கூடும் என்றும் அரசியல் பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## மதுரை மாவட்டத்தில் காங்கிரஸுக்கு தனி தொகுதி கிடைக்குமா?



மதுரை: பிப்.27-

முன்னாள் அமைச்சர் கக்கனுக்கு பிறகு காங்கிரஸ் கட்சியில் மதுரை மாவட்டத்தில் இருந்து ஒரு தலித் எம்எல்ஏ கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றும், திமுக கூட்டணியிடமிருந்து சோழவந்தான் தனித் தொகுதியை கேட்டுப் பெற்று வாய்ப்பு வழங்க வேண்டும் என்றும் காங்கிரஸ் தலைமைக்கு தொண்டர்கள், நிர்வாகி கள் நெருக்கடி கொடுக்கின்றனர்.

மதுரை மாவட்டம் மேலூர் சட்டப்பேரவைத் தொகுதியில் அதிகமுறை காங்கிரஸும், அதிமுகவும் வென்றுள்ளன. காங்கிரஸ் 7 முறையும், தமாகா ஒரு முறையும், அதிமுக 6 முறையும் வென்றன.

இத்தொகுதியில் 1957ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட கக்கன், பக்தவத் சலம், காமராஜரின் அமைச்சரவையில் பொதுப்பணி, காவல்துறை, ஆதி திராவிடர் நலத்துறை, விவசாயத்துறை உள்ளிட்ட முக்கியத் துறை அமைச்சராக தனித்துவத்துடன் செயல்பட்டார்.

கடைசிக் காலம் வரை அரசு பேருந்துகளையும், சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையை மட்டுமே பயன்படுத்தி வந்தார். இப்படி நேர்மைக்கும், எளிமைக்கும் இலக்கணமாகத் திகழ்ந்தவர் கக்கன். சுதந்திரப் போராட்ட தியாகி, மக்களவை உறுப்பினர், தமிழக காங்கிரஸ் தலைவர், இந்திய அரசியல் அமைப்பியல் உறுப்பினர் என பல பதவிகளை வகித்தார்.

மேலூர் இரட்டை உறுப்பினர் கொண்ட சட்டப்பேரவைத் தொகுதியாக இருந்தபோது அதில் ஒருவரில் தலித்தாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் கக்கன். அவருக்குப் பிறகு இந்தத் தொகுதி பொதுத் தொகுதியானது. ஆனால், கக்கனுக்குப்பிறகு காங்கிரஸ் கட்சியில் இருந்து ஒரு தலித் எம்எல்ஏகூட தேர்ந்தெடுக்கப் படவில்லை.

1977ம் ஆண்டு சமயநல்லூர் தனித்தொகுதியாக இருந்தபோது காங்கிரஸ் சார்பில் போட்டி யிட்ட கார்மேகம், அதிமுக வேட்பாளர் செல்வ ராஜிடம் தோல்வி அடைந்தார்.அதற்குப்பின் காங்கிரஸ் கட்சியில் யாருக்கும் வாய்ப்பளிக்க வில்லை.

தற்போது திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ், மதுரை மாவட்டத்தின் ஒரே தனித் தொகுதியான சோழவந்தானை கேட்டுப்பெற வேண்டும் என்று மாநிலத் தலைமைக்கும், தேசிய தலைமைக்கும் காங்கிரஸ் கட்சியினர் மனுக்களை அனுப்பத் தொடங்கியுள்ளனர்.

இதுகுறித்து முன்னாள் எஸ்சி பிரிவு மாவட்ட தலைவர் பாண்டியன் கூறுகையில், ''கக்கனுக்குப் பிறகு மதுரை மாவட்டத்தில் காங்கிரஸ் கட்சியில் இருந்து ஒரு தலித் எம்எல்ஏகூட சட்டப்பேரவைக்கு அனுப்பப் படவில்லை. தலித் சமூகத்தினருக்கு மதுரை மாவட்ட காங்கிரஸ் கட்சியில் போட்டியிட வாய்ப்பும் கிடைக்கவில்லை.

மதுரையைச் சேர்ந்தவர், மேலூரை சேர்ந்தவர் என்று கக்கனின் பெருமைகளைச் சொல்கிறோமே தவிர, அவரது சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை எம்எல்ஏ ஆக்க நிர்வாகிகளுக்கு மனமில்லை. ஒருங்கிணைந்த மதுரை மாவட்டத்தில் 1962ம் ஆண்டு சோழவந்தான் சட்டப்பேரவைத் தொகுதியில் இருந்து மட்டும் பொன்னம்மாள் எம்எல்ஏவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர்களுக்கு பிறகு மதுரை மாவட்ட காங்கிரஸ் கட்சியில் இருந்து ஒரு தலித் எம்எல்ஏ கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை. இடைப்பட்ட காலத்தில் பொன்னம்மாளின் பேத்தி ஜான்சிராணி, நிலக்கோட்டை, சோழவந்தானில் வாய்ப்புக் கேட்டார். அவருக்கு சோழவந்தானில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படவில்லை.

காமராஜரின் ஆட்சி அமைப்போம் என்று கூறும் காங்கிரஸ் கட்சி, கக்கன் வாழ்ந்த மண்ணில் இருந்து ஒரு தலித் சட்டப்பேரவை உறுப்பினரை அனுப்ப இந்தத் தேர்தலிலாவது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையில் சோழவந்தான் தொகுதியை காங்கிரஸ் கட்சி கேட்டுப் பெற வேண்டும். ஆனால், மதுரை மாவட்ட காங்கிரஸ் கட்சியினர் வடக்கு, தெற்கு தொகுதிகளைக் கேட்டு வருகின்றனர். அவர்கள் தாங்கள் சார்ந்த சமூகத்துக்காகவும் அல்லது அவரது உறவுகளை வேட்பாளர்களாக்கவும் மட்டுமே திட்டமிடுகிறார்கள்.

காங்கிரஸ் கட்சியின் அடிப்படை வாக்கு வங்கி தலித் மற்றும் சிறுபான்மையினர்தான். எனவே, சோழவந்தான் தொகுதியை திமுக தலைமையிடம் காங்கிரஸ் கேட்டுப் பெற்று சட்டப்பேரவைக்கு ஒரு தலித்தை அனுப்ப வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.



■ சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பழுதடைந்த நிலையில் கட்டிடம் ஒன்று மாணவிகளின் பாதுகாப்புக்கு ஆபத்தாக இருந்தது. இதுகுறித்து நகர் மன்ற துணைத் தலைவர் பாலசுந்தரம் கோரிக்கை வைத்ததையடுத்து எம்.எல்.ஏ தமிழரசி ரவிக்குமார் அலுவலர்களை தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்தார். இதையடுத்து கட்டிடங்களை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது.



# தாராபுரம் திரு ராமகிருஷ்ணா நல்லமை பாலிடெக்னிக் கல்லூரியில் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது

தாராபுரம், பிப்.27-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் நல்லமை நகரில் மிகவும் பிரபலமான திரு ராமகிருஷ்ணா நல்லம்மை பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில்,

கொங்குவேள் ஐயா சேனாபதி கவுண்டர் அவர்களின் 34வது நினைவு நாளை முன்னிட்டு திரு.இராமகிருஷ்ண நல்லம்மை பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் கோவை அரவிந்த் கண் மருத்துவமனை இணைத்து நடத்திய இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. இம்முகாமில் 500 க்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்துகொண்டனர். இதில் 100க்கும் மேற்பட்டவர்களுக்கு கண் கண்ணாடியும் மேலும் 150க்கும் மேற்பட்டவர்கள் அறுவை சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இந்நிகழ்வுக்கு அரவிந்த் கண் மருத்துவமனை தலைவர் டாக்டர்.நரேந்திரன், கல்லூரி தலைவர் மற்றும் தாளாளர் KSN.வேணுகோபாலு MA., Ex MLA., செயலாளர் KV. விஷ்ணு செந்தூரன் MBA., இயக்குனர் ST.செந்தில் குமார், முதல்வர் S.செல்வகுமார், நாட்டு நல பணி திட்ட அலுவலர்கள் G. ராஜேஷ் கண்ணன், A.எப்சிபாய், கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெரும்திரளாக பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.




# சாதனை படைத்து அரசு சார்பில் மலேசியா சென்று திரும்பிய அரசுப்பள்ளி மாணவனுக்கு பாராட்டுவிழா

தேவகோட்டை.பிப்.27-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை அருகேகண்ணங்குடி வட்டார வள மையத்தில் தலைமையாசிரியர் கூட்டம் நடைபெற்றது வட்டார கல்வி அலுவலர் மாலதி தலைமை வகித்தார். மங்களம் நடுநிலைப்பள்ளியில் பயிலும் ஏழாம் வகுப்பு மாணவன் நித்தின் சிறார் திரைப்படப்போட்டியில் மாநில அளவில் வெற்றி பெற்றார். அதனைத்தொடர்ந்து தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வித்துறை சார்பாக மலேசியா சுற்றுலா சென்று திரும்பினார் சாதனை படைத்த மாணவன் நித்தினுக்கு வட்டார கல்வி அலுவலர் மாலதி சந்தனமாலை பொன்னாடை அணிவித்து கேடயம் வழங்கி பாராட்டி வாழ்த்திப் பேசினார் வட்டார வள மைய மேற்பார்வையாளர். (பொ) பாண்டி மற்றும் ஆசிரிய பயிற்றுநர் அப்துல்அலிம் ஆசிரியர்கள் சார்பில் பீட்டர் குணசீலன் ஆகியோர் வாழ்த்தி கௌரவித்தனர். மாணவன் நித்தின்

சிவகங்கை மாவட்டத்தில் வெளிநாடு செல்ல தேர்வான இரண்டு மாணவர்களில் ஒருவர் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது மாணவன் நித்தின் மன்றப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றது குறித்தும் அரசு சார்பாக சென்ற மலேசியா சுற்றுப்பயணம் குறித்தும் அது சமயத்தில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வீடியோ காணொலி வாயிலாக பயண அனுபவங்களை கேட்டறிந்தது குறித்தும் தனது அனுபவங்களை மிகச்சிறப்பாக எடுத்துரைத்தார் மாணவன் நித்தினை தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினர்.




■ திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் தலைமையில் நேற்று (26.2.2026) மாநகராட்சி மைய அலுவலகம், மாமன்ற கூட்டரங்கில் நடைபெற்ற 20262027 வரவு செலவு திட்ட அறிக்கை கூட்டத்தில் மேயர் ந.தினேஷ்குமார் ஓராண்டு சாதனை விளக்க கால பேழையினை வெளியிட்டார். உடன் துணை மேயர் ரா.பாலசுப்ரமணியம், நிதி குழு தலைவர் கு.கோமதி, மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# மானாமதுரை: அரசு மருத்துவமனைகளில் சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் திடீர் ஆய்வு

மானாமதுரை பிப்.27-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார், தொகுதிக்குட்பட்ட அரசு மருத்துவமனைகளில் இன்று நேரில் சென்று விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

புதிய மற்றும் பழைய மருத்துவமனைகளில் ஆய்வு:

மானாமதுரை நகராட்சி புது பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் பழைய மருத்துவமனை வளாகம் ஆகிய இரண்டு இடங்களுக்கும் அவர் நேரில் சென்றார். அங்குள்ள வார்டுகள், மருந்தகம் மற்றும்



அவசர சிகிச்சைப்பிரிவு ஆகியவற்றை ஒவ்வொன்றாகப் பார்வையிட்டு, மருத்துவக் கட்டமைப்பு வசதிகள் குறித்து ஆய்வு செய்தார்.

நோயாளிகளிடம் நலம் விசாரிப்பு:

ஆய்வின் போது, உள்நோயாளி பிரிவில் சிகிச்சை பெற்று வருபவர்களிடம் எம்.எல்.ஏ. தமிழரசி ரவிக்குமார் கலந்துரையாடினார். அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சையின் தரம், மருந்து மாத்திரைகள் முறையாக வழங்கப்படுகிறதா மற்றும் மருத்துவர்களின் கனிவான அணுகுமுறை குறித்து நேரடியாகக் கேட்டறிந்தார்.

அதிகாரிகளுக்கு உத்தரவு:

பொதுமக்களுக்குத் தங்குதடையின்றி தரமான மருத்துவச் சேவை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என அங்குள்ள மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அவர் அறிவுறுத்தினார். மேலும், மருத்துவமனை வளாகத்தைத் தூய்மையாகப் பராமரிக்கவும், தேவையான கூடுதல் வசதிகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.




■ சிவகங்கை மாவட்டம் திருப்பாச்சேத்தி அருகே உள்ள கச்சநத்தம் கிராமத்தில் வன்கொடுமை படுகொலை வழக்கில், உயர்நீதிமன்றம் நேற்று வழங்கிய தீர்ப்பில் 27 பேரில் 26 பேருக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை உறுதிப்படுத்தியது.எதிரி இளையராஜாவின் மேல்முறையீடு ஏற்கப்பட்டது. அவரை தொடர்புடைய வழக்கை உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்து நடத்த வழக்கறிஞர்கள் நடவடிக்கை எடுக்க உள்ளனர்.இந்த தீர்ப்பின் மூலம் சட்டமும் நீதியும் வென்றுள்ளதாக உயிரிழந்த நால்வரின் குடும்பத்தினர் தெரிவித்தனர்.






# மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினம்

தேனி பிப்.27-

தேனி மாவட்டம் சுருளிப்பட்டி அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளியில் பெண் குழந்தைகள் பாதுகாப்பு தின விழிப்புணர்வு அன்புஅறம் செய் அறக்கட்டளை குழந்தைகளின் பாதுகாப்பை பற்றி எடுத்துக் கூறியது.நிகழ்வில் பள்ளியின் தலைமை ஆசிரியர் மேகலா வரவேற்புரையாற்றினார்

சோசியல் வெல்பர் லதா மாணவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் மாணவர்களுக்கானஅரசு நலத்திட்டங்களையும் எடுத்துக் கூறினார்.தனியார் சிலம்ப பயிற்சி ஆசிரியர் சச்சின் மாணவர்களின் உடல் ஆரோக்கியம் மற்றும் தற்காப்பு கலை பற்றி எடுத்து கூறினார்.அறக்கட்டளை தன்னார்வலர் ஜெயா அரசுப் பள்ளியில் வழங்கும் சிறந்த கல்வியைப் பற்றி மாணவர்களுக்கு எடுத்து கூறி அரசுப் பள்ளியிலும் மாணவர்கள் நிறைந்து இருக்க வேண்டும் என்பதைக் கூறினார்.

அறக்கட்டளையின் நிறுவனர் சுருளிப்பட்டி ரா. அன்பு ராஜா பெண் சிசுக்கொலை தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் பாலின பாகுபாடு, அரசு உதவி எண்கள் பற்றி எடுத்துக் கூறப்பட்டது.

இன்ஜினியர் ராம் ஆசிரியர்கள் ஜான்சி ராணி, திவ்யா மாணவர்களுக்கு இனிப்பு வழங்கினர்.



■ தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு, தேர்தல் நடைமுறை காலங்களில் தமிழ்நாடு கேரளம் மாநில எல்லையில் அமைந்துள்ள தேனி மற்றும் இடுக்கி மாவட்டங்களில் தேர்தல் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் தேனி மாவட்ட தேர்தல் அலுவலர் /தேனி மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங், மற்றும் இடுக்கி மாவட்ட தேர்தல் அலுவலர் / இடுக்கி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் தினேசன் செருவாட்,ஆகியோர் தலைமையில்காணொளிக்காட்சி வாயிலாக நடைபெற்றது.



# முன்னாள் முதல்வர் அம்மா அவர்களின் 78வது பிறந்தநாள்விழா

நீலகிரி, பிப்.27-

நீலகிரி மாவட்டம் ஜெகதளா பேரூராட்சி சார்பில்

அரவங்காடு பஜார்பகுதியில் புரட்சித்தலைவிமுன்னாள் முதல்வர் அம்மா அவர்களின்78வது பிறந்தநாளை முன்னிட்டுஅவர்களின் திருவுரு வப்படத்திற்குமாலை அணிவித்து பொதுமக்களுக்கு அன்னதானத்தை தொடங்கி வைத்தார் அம்மா பேரவை மாவட்ட செயலாளர் குன்னூர் சட்டமன்ற தொகுதி முன்னாள் உறுப்பினர் சாந்தி ராமு

தலைமையில்அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் மாவட்டச் செயலாளர் கலைச்செல்வன்நிகழ்ச்சிக்கு சிறப்பாக ஏற்பாடு செய்த ஜெகதளா பேரூராட்சி செயலாளர் சஜுமாவட்டவைத் தலைவர்லி மணிமாநில விவசாயி துணைச் செயலாளர் ஜெயராம்மாவட்ட விவசாய அணி துணைச் செயலாளர் செயலாளர் கட்டபெட்டுலிங்கன்

மகேஷ், சக்திவேல்,கண்ணன், சிவகுமார்,பாட்ஷா, வினோத், ஆறுமுகம், ராஜ்குமார் நாகராஜ்சுரேஷ் செந்தில்

கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் கழகத்தின் முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




■ நீலகிரி மாவட்டம், மசினகுடி ஊராட்சி மாவனல்லா பகுதியில் கட்டட அங்கீகாரம் இல்லாமல் செயல்பட்டு வந்த ஆரம்ஸ் பார்ம் மற்றும் கே லார்ட் ரிசார்ட்களை கூடலூர் வட்டார வளர்ச்சி அலுவலர் சுப்பிரமணி தலைமையில் பூட்டி சீல் வைக்கப்பட்டது.



■ நீலகிரி மாவட்டம் உதகை மத்திய பேருந்து நிலையத்தில்செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ் நாடு அரசின் சாதனை விளக்கப்புகைப்படக்கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டு அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்களை தெரிந்துக்கொண்டனர்.



■ கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை ஊராட்சிஒன்றிய அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.



## திருவையாறு நகராட்சியில் வளர்ச்சி திட்ட பணிகள் தொடங்கி வைத்த எம் பி எம் எல் ஏ

தஞ்சாவூர் பிப்.27-

திருவையாறு நகராட்சியில் புதிதாக அமைக்கப்பட்ட பூங்கா, பொது விநியோக கட்டிடம் , அங்கன்வாடி கட்டிடம் திறப்பு விழா ,சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நகராட்சி பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணி தொடக்க விழா நடந்தது. திருவையாறு எம்எல்ஏ துரைசந்திரசேகரன், எம்பி முரசொலி ஆகியோர்திருவையாறு நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 202526 ன் கீழ் 15 வது வார்டு கோதண்டராமன் நகரில் 33 லட்சம் செலவில்புதிதாக கட்டப்பட்ட பூங்கா , எம்பி நிதியில் 8 வது வார்டு ராஜா நகரில் 15.50 லட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்ட பொது விநியோக மையக் கட்டிடம் ,மாநில நிதிகுழு பள்ளி மேம்பாட்டு திட்ட செயல்பாடு மற்றும் பராமரிப்பு பணி 2024 25 ன் கீழ் 7வது வார்டு காவேரி நகரில் 19.50 லட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்டஅங்கன்வாடி மையம் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தனர். தொடர்ந்து

திருவையாறு நகராட்சியில்2025 2026 சாலை மேம்பாட்டு பணிகள் திட்டத்தின் கீழ் நகராட்சி பகுதிகளில் ரூ 391.93 லட்சம் செலவில் தார்சாலை அமைக்கும்பணிகளை தொடங்கி வைத்தனர். இதில் நகராட்சி தலைவர் கஸ்தூரி நாகராஜன் துணைத்தலைவர் நாகராஜன் , ஆணையர் மதன்ராஜ் , மேலாளர் சரஸ்வதி,பொறியாளர் வெங்கட்ராமன், சுகாதார ஆய்வாளர் முத்துமுகம்மது, திமுக ஒன்றிய செயலாளர்கள் சிவசங்கரன், கௌதமன்,

திமுக இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் முகில்வேந்தன், நகராட்சி வார்டு கவுன்சிலர்கள் வளர்மதி, புவனா, சதீஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி 50வது வட்டம் சார்பில் வட்ட செயலாளர் ஆர்.ஜீவன் அவர்கள் தலைமையில், பகுதி துணை செயலாளர்கள் ஜா.ரவிக்குமார், ஆர்.செல்வகுமார் ஆகியோர் வரவேற்புரையில், கழக தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் திராவிட மாடல் அரசின் சாதனைகளை பொதுமக்களுக்கு எடுத்துரைத்து, நலத்திட்ட உதவிகள் வழங்கினார், இந்த நிகழ்ச்சியில் 4வது மண்டல குழு தலைவர் பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ், 5வது மண்டல குழுத்தலைவர், தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.இந்திரன், பகுதி அவை தலைவர் டி.ஆர்.கோபி, தலைமை கழக பேச்சாளர்கள் கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகர பாண்டியன், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள், மாநகர அணியின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## பெரியகுளம் அருகே வடுகபட்டியில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 78 வது பிறந்த நாள் விழா

பெரியகுளம் பிப். 27-

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள வடுகபட்டியில் அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் சத்திய ஞான சபையில் மறைந்த தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா 78 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அதிமுக தேனி கிழக்கு மாவட்ட இலக்கிய அணி செயலாளர் வழக்கறிஞர் தவமணி ஏற்பாட்டில் அன்னதானம் நடைபெற்றது.இந்த அன்னதானத்தில் கலந்து கொண்டவர்கள் அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனி பெருங்கருணை

அருட்பெருஞ் ஜோதி என வழிபாடு செய்து வள்ளலாருக்கு தீபாதாரனை காண்பித்து வழிபட்டனர் .இந்த அன்னதான விழாவினை அதிமுக தேனி கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் முறுக்குகோடை எம்.பி.ராமர் கலந்துகொண்டு துவக்கி வைத்தார் . பெரியகுளம் ஒன்றிய கழகச் செயலாளர்கள்



அன்னபிரகாஷ், ராஜகுரு , மாநில அம்மா பேரவை இணைச் செயலாளர் ஜெயக்குமார் , மாவட்ட கழக இணைச் செயலாளர் வி.முத்துலட்சுமி, இளைஞர் இளம் பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் அப்பாஸ் மைதீன் , வடுகபட்டி பேரூர் கழக செயலாளர் பேராசிரியர் பாலமுருகன் , பெரியகுளம் நகரச் செயலாளர் பழனியப்பன் ,தேனி நகர் கழகச் செயலாளர் கிருஷ்ணகுமார், துணைச்செயலாளர் சுந்தரபாண்டியன் , மாநில பொதுக்குழு உறுப்பினர் தவமணி கருப்பசாமி, மாவட்ட பிரதிநிதிகள் சுரேஷ்,விஜய், ஆனந்த், மாவட்ட சிறுபான்மையினர் பிரிவு அணி செயலாளர் சலீம் , மாவட்ட மகளிர் அணி இணைச் செயலாளர்கள் பாப்பா இளமுருகன்,சித்ரகலா,நகர துணைச் செயலாளர் வெங்கடேஷ் , நகர அம்மா பேரவை செயலாளர் ஜெயசீலன் உள்ளிட்ட மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள்,சார்பு அணி நிர்வாகிகள்,வள்ளலார் சத்தியஞான சபை நிர்வாகிகள் மற்றும் பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர் .

## காவல்துறையின் முக்கிய அறிவிப்பு சமூக வலைதளங்களில் பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் கருத்துக்கள் மற்றும் பொது மக்களை அச்சுறுத்தும் வகையில் புகைப்படங்களை பதிவிட்டவர்களின் மீது வழக்குப்பதிவு

தேனி பிப். 27-

தேனி மாவட்டத்தில் சமூக வலைதளங்களில் மதம், சாதி பிரச்சனைகளை தூண்டும் விதமாகவும் மற்றும் அருவாள், பட்டாக்கத்தி ஆகிய ஆயுதங்களுடன் பொதுமக்களை அச்சுறுத்தும் விதமாகவும் பதி விடுபவர்களை தீவிரமாக கண்காணிக்கப்பட்டும் அதனை முற்றிலும் தடுக்கும்பொருட்டு காவல் துறை தலைவர், தென் மண்டலம்,



மதுரை அவர்களின் அறிவுறுத்தலின் பேரிலும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரிலும் சமூக வலைதளங்களில் தொடர்ந்து அச்சுறுத்தல் மற்றும் பிரிவினை வாத கருத்துக்களை பதிவிட்டவர்கள் மீது உத்தமபாளையம், கூடலூர் வடக்கு, வீரபாண்டி, போடி தாலுகா, அல்லிநகரம், இராஜதானி ஆகிய காவல்நிலையங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இதுபோன்று சமூக வலைதளங்களில் சாதி, மத பிரச்சனைகளை தூண்டும் விதத்திலோ மற்றும் பொதுமக்களை அச்சுறுத்தும் விதத்திலோ கருத்துக்கள் மற்றும் புகைப்படங்களை பதிவிடும் நபர்கள் மீது காவல்துறை கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் என தேனி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் Dr.B.சினேஹப்ரியா, எச்சரித்துள்ளார்.

உங்களின் ஒவ்வொரு சமூகவலைதள பதிவுகள் உன்னிப்பாக கண்காணிக் கப்பட்டுவருகிறது, சமூகவலைதளங்களை கவனமாகவும், பொறுப்புடனும் கையாளுங்கள் என்ற காவல்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

## சென்னை தெற்கு மாவட்டம் சோழிங்கநல்லூர் சட்டமன்ற தொகுதி திமுக சார்பில் 5 ஆண்டுசாதனைகள் விளக்கம்தேர்தல் பரப்புரை மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் 5000 க்கும் மேற்பட்டோருக்கு நலத்திட்ட உதவிகள்

சோழிங்கநல்லூர் பிப் .27-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட டாக்டர் கலைஞர் கருணாநிதி சாலை, மகாராஜா திருமண மண்டப வளாகம் (பிப் : 23) திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு தமிழ்நாடு தலைகுனியாது திமுக சார்பில் 5 ஆண்டுசாதனைகள் விளக்க தேர்தல் பரப்புரை மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் எம். எல். ஏ., எஸ். அரவிந்த் ரமேஷ் தலைமையில் வழங்கி சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து 14 வது மண்டல குழு தலைவர்., எஸ். வி. ரவிச்சந்திரன்,15 மண்டல குழு தலைவர்., M. இ. மதியழகன், புனித தோமையார் மலை ஒன்றிய கழகச் செயலாளர், கோவிலம்பாக்கம்., ஜி. வெங்கடேசன் முன்னிலை வகித்தனர். மற்றும் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்,கழக மாநிலங்களவை பொருளாளர், கழக கொள்கை பரப்புச் செயலாளர், எஸ் .ஜெகத்ரட்சகன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன்,சே



ாழிங்கநல்லூர் தொகுதி பொறுப்பாளர், டாக்டர்., அரிமா நாகை. சந்திரபாபு சிறப்புரையாற்றினார்கள். ம. சட்டமன்ற உறுப்பினர்., காரப்பாக்கம், க.கணபதி, வி.ச.ம. உறுப்பினர்., ஏ.வி.எம். பிரபாகராஜா, பொ.செ. மாநகராட்சி துணை மேயர். மு.முகேஷ்குமார் மற்றும் த. செ. கு. உறுப்பினர்., பாலவாக்கம் க.சோமு, தலைமை செயற்குழு உறுப்பினர், க. தனசேகரன், கழகத் தேர்தல் பணிக்குழு செயலாளர், பொ. மணிமாறன், தலைமை செயற்குழு உறுப்பினர்., போரூர், அருணாச்சலம், கழக வர்த்தக அணி செயலாளர், காசிமுத்துமாணிக்கம், மாவட்ட கழக அவைத்தலைவர்., எஸ் .குணசேகரன், மாவட்ட கழகப் பொருளாளர், எஸ் .பாஸ்கரன், புனித தோமையார் மலை ஒன்றிய குழு தலைவர் ., சங்கீதா பாரதி ராஜன், த.பொதுக்குழு உறுப்பினர்., எம்.கே .ஏழுமலை, த.பொதுக்குழு உறுப்பினர்., அரி கிருஷ்ணன், மாநி.த.தொ . அ.து.அ, ரத்னா லோகேஸ்வரன், மா. இ. அ.து. அமைப்பாளர், சித்தாலப்பாக்கம், ஜெ. இ. பாண்டியன், மா.இ. அ.து. அமைப்பாளர், கா. i. தியாகராஜன்,மா.இ. அ.து. அமைப்பாளர், எம். ஸ்ரீகாந்த், மா.மாணவர் அணி அமைப்பாளர்., பா.அருண்குமார், மா. இல. அ. அமைப்பாளர், எம் .பார்த்திபன், மா.ம .அ. அமைப்பாளர், என். அனிஷ், வேங்கை வாசல் ஊராட்சி மன்ற தலைவர்., M. ஜெயச்சந்திரன், மு.மா.து. செயலாளர்., வி.எட்டியப்பன், மு.மாவட்ட துணைச் செயலாளர்., எஸ் .பொன்னுவேல், மு.மா.மீனவர் அணி அமைப்பாளர், த. விஜயபாலன், தொகுதி தகவல் தொ. நூ. அ.ஒருங்கிணைப்பாளர், A. ஸ்டாலின்மொழி, சோழிங்கநல்லூர் தொகுதி : 199 வது ஆம் என்ற உறுப்பினர், T. சங்கர், 189 மாமன்ற உறுப்பினர், வா. பாபு, 200 மாமன்ற உறுப்பினர், அ. முருகேசன்,195வது மாம் என்ற உறுப்பினர்,க. ஏகாம்பரம்,186 வது மாமன்ற உறுப்பினர், ஜே.கே. மணிகண்டன்,183 வது ஆம் என்ற உறுப்பினர், தமிழரசி சோமு, 187வது மாமன்ற உறுப்பினர், ஷர்லி தாமஸ்ஜெய்,185வது மாமன்ற உறுப்பினர், ஷர்மிளா தேவி திவாகர், 188 மாமன்ற உறுப்பினர், சாமீனா செல்வம்,194வது மாமன்றஉறுப்பினர், விமலா கர்ணா, ஊராட்சி மன்ற தலைவர்கள் : எஸ் .ரவி, சிவபுசணம் ரவி, M. AK,. மா.கு. உ. என் . வேதகிரி, ஒன்றிய குழு உறுப்பினர்கள்: எஸ். பன்னீர்செல்வம், மோகனப்பிரியா சரவணன், கல்பனா சுரேஷ், துணைத் தலைவர்கள் : எஸ் .கோபு, டி. என். அன்புமணி, எஸ் .லோகிதாஸ், கே.வி. கார்த்திகேயன், T. ரமணி கணேசன், செம்மஞ்சேரி, 200 மாவட்ட பிரதிநிதி, எஸ். பி. ஹரி

நன்றி உரையாக : 198 வது வட்டச் செயலாளர், பா. தேவகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் இறுதியில் 5000 க்கும் மேற்பட்டோருக்கு எம்.எல்.ஏ

, எஸ் .அரவிந்த் ரமேஷ் ஒவ்வொரு நபருக்கும் நலத்திட்ட உதவிகளை நேரில் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் புதிய தங்கும் விடுதிகள் கட்டும் பணிகளை தமிழ்நாடு முதல்வர் மு க ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்

திண்டுக்கல், பிப்.27-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் இந்து சமய அறநிலை துறை சார்பில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் புதிய தங்கும் விடுதிகள் 47.5 கோடி மதிப்பிலான கந்தன் இல்லம், கடம்பன் இல்லம், மற்றும் இடும்பன் இல்லம் போன்ற புதிய தங்கும் விடுதிகள் கட்டும் பணியினை காணொளி காட்சியின் மூலமாக தமிழ்நாடு முதலமைச்சர்



மு க ஸ்டாலின் தொடங்கி வைத்தார். மேலும் திருக்கோயில் வடக்கு கிரி வதி குடமுழுக்கு நினைவரங்கம் வளாகத்தில் 5.5 கோடி மதிப்பிலான வரிசை மண்டபம் கட்டும் பணியினையும் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் தொடங்கி வைத்தார்...

இந்நிகழ்வில் பழனி தேவஸ்தான அதிகாரிகள் , அறங்காவல் குழுவினர் மற்றும் பக்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்..

## புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 78வது பிறந்தநாள் முன்னிட்டு வண்டலூர் ஊராட்சி சார்பில் அறுசுவை சிக்கன் பிரியாணி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள்

வண்டலூர் பிப்.27-

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய வண்டலூர் ஊராட்சி சார்பில் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 78வது பிறந்தநாளை முன்னிட்டு அறுசுவை சிக்கன் பிரியாணி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய அம்மா பேரவை ஒன்றிய துணை தலைவர் சி.வேதகிரி தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர்



கஜா என்கின்ற கஜேந்திரன் கலந்து கொண்டு அம்மா அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு சிக்கன் பிரியாணி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்

இந்த நிகழ்ச்சியில் 7வது வார்டு உறுப்பினரும் கிளை கழக செயலாளர், கே.நிர்மலா குலசேகரன், அமைப்பு சாரா ஓட்டுநர் நல சங்க காட்டாங்குளத்தூர் ஒன்றிய தலைவர் என்.குமார், மாவட்ட வர்த்தக அணி இணை செயலாளர் நீல நந்தினி வாசு, காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய எம்ஜிஆர் மன்ற அணி செயலாளர் வெங்கடேசன், சி.பழனி, காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி இணைசெயலாளர் ஜே.பாஸ்கர், டி.தனபால், ஜி.ரகு, வி.ஜெகதிஷ், எம்.ஜி.ஆர்.மணி, காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய சிறுபான்மை அணி துணை செயலாளர் ஆர்.பி.ரமேஷ், ஆர்.ஜயப்பன், கே.மணிவண்ணன், எம்.நடராஜ், வெங்கடேஷ், கே.ஜானகிராமன், எஸ்.ரவி. கே.விவேகானந்தர், மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நிர்வாகிகள் வார்டு நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ மதுரை மாவட்டம், ஹோட்டல் கோர்ட்யார்ட் மேரியாட்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் நடைபெறும் மண்டல அளவிலான மகளிர் சுய உதவிக் குழு உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்கள் சந்திப்பு 2026(WOMEN ENTREPRENEURS MEET 2026) நிகழ்ச்சியினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி குத்துவிளக்கேற்றி வைத்தார்.உசிலம்பட்டி சார் ஆட்சியர் உட்கர்ஷ் குமார்,இ.ஆ.ப., ,மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன் ஆகியோர் உடன் உள்ளனர்.தொடர்ந்து மகளிர் சுய உதவிக் குழுவினர் மற்றும் விற்பனை நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.



■ தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் போக்குவரத்து அலுவலகங்களில் உருவாக்கப்பட்டுள்ள கணிணிமயமாக்கப்பட்ட தானியங்கி ஓட்டுநர் தேர்வுத்தளங்களை தொடங்கி வைத்தார்.அதனைத் தொடர்ந்து மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி மதுரை மாவட்டம் மதுரை வடக்கு வட்டாரத்து போக்குவரத்து அலுவலகத்தில் உருவாக்கப்பட்டுள்ள கணிணிமயமாக்கப்பட்ட தானியங்கி ஓட்டுநர் தேர்வுத்தளத்தை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து பார்வையிட்டார்.



## காவேரிப்பட்டணம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.282.22 லட்சம் மதிப்பிலான கூடுதல் வகுப்பறை கட்டிடம் திறப்பு, மதியழகன் எம்எல்ஏ பங்கேற்பு

கிருஷ்ணகிரி, பிப்.27-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ரூ.282.22 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய கூடுதல் வகுப்பறை கட்டிடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக துவக்கி வைத்தார். மாணவர்கள் அதிகரித்து வரும் நிலையில், போதுமான வகுப்பறை வசதி ஏற்படுத்தும் நோக்கில் இந்த கட்டிடம் நவீன வடிவமைப்புடன் அமைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம் எல் ஏ அவர்கள் நிகழ்விடத்தில் குத்துவிளக்கு ஏற்றி புதிய கட்டிடத்தை திறந்து வைத்து பயன்பாட்டிற்கு ஒப்படைத்தார். தனது உரையில் அவர், அரசு பள்ளிகளில் தரமான கல்வி மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்த தமிழக அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருவதாகவும், இந்த புதிய கட்டிடம் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு பெரிதும் துணை புரியும் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சாதனை குரல், மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், நகர செயலாளர் ஜே.கே.எஸ். பாபு, ஒன்றிய செயலாளர்கள் தேங்காய் சுப்பிரமணி, சரவணன், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர்கள் கே.வி.எஸ். சீனிவாசன், அன்பரசு,மாநில தொமுச துணைச் செயலாளர் மோகன், முன்னாள் நகர செயலாளர் ஜே கே எஸ் சாஜித், காவேரிப்பட்டினம் பேரூராட்சி தலைவர் அம்சவேணி செந்தில்குமார், துணை பேரூராட்சித் தலைவர் மாலினி மாதையன்,மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மணி விஜயன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பாரி, முன்னாள் ஊராட்சிக்குள்ள துணைத் தலைவர் சசிகலா தசரா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பள்ளி தலைமை ஆசிரியர் வேந்தன் உள்ளிட்ட ஆசிரியர்கள், பேரூராட்சி கவுன்சிலர்கள், திமுக நிர்வாகிகள், பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்று மகிழ்ச்சி தெரிவித்தனர்.

புதிய கூடுதல் வகுப்பறைகள் மூலம் மாணவர்கள் நெரிசல் இன்றி சீரான கற்றல் சூழலில் பயிலும் வாய்ப்பு கிடைத்துள்ளது. கல்வி கட்டமைப்பு மேம்பாட்டில் இந்த முயற்சி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அரசு பள்ளிகளின் தரத்தை உயர்த்தும் முக்கியமான முன்னேற்றமாக அமைந்துள்ளது.

## புரட்சித்தலைவி அம்மா பிறந்த நாளை முன்னிட்டு முடிச்சூர் ஊராட்சியில் அதிமுக அலுவலகம் திறப்பு விழா செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் சிட்லபாக்கம் ச.இராஜேந்திரன் திறந்து வைத்தார்

முடிச்சூர் பிப். 27-

செங்கல்பட்டு மாவட்டம் பரங்கிமலை மேற்கு ஒன்றிய முடிச்சூர் ஊராட்சியில் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 78வது பிறந்தநாளை முன்னிட்டு அதிமுக அலுவலகம் திறப்பு விழா லட்சுமி நகர் பேருந்து நிலைய அருகே செங்கல்பட்டு மேற்கு மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் டிவிஆர் வெங்கட்ராமன் அவர்கள் ஏற்பாட்டில் மாவட்ட பிரதிநிதி 8வது வார்டு உறுப்பினர் ஏ.அருள், முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவரும் மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் முடிச்சூர் சசிகலா கல்கி, பரங்கிமலை மேற்கு ஒன்றியம் மகளிர் அணி செயலாளர் சரளா சுதாகர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் சிட்லபாக்கம்



ச.இராஜேந்திரன், பரங்கிமலை மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் எம்.பி.மனோகரன்,

செங்கல்பட்டு மேற்கு மாவட்ட அம்மா பேரவை மாவட்ட செயலாளர்

ஜி.எஸ்.புருஷோத்தமன், செங்கல்பட்டு மேற்கு மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி மாவட்ட செயலாளர்

ஏ.எஸ்.சிவகுமார், செங்கல்பட்டு மேற்கு மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர்

வி.கே.பி.நாராயணன், தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் ஸ்டார் பிரபா, புரட்சி பாரதம் தாம்பரம் தொகுதி செயலாளர் எட்வின், அமமுக ஒன்றிய செயலாளர் கென்னடி, செங்கல்பட்டு வடக்கு மாவட்ட மகளிர் அணி தலைவர் கே.ராஜி சுரேஷ்,

பெருங்களத்தூர் மற்றும் முடிச்சூர் மண்டல் செயளாலர் விஜயலக்ஷ்மி,

பெருங்களத்தூர் மற்றும் முடிச்சூர் மண்டல் பொதுச்செயலாளர் எஸ்.சிவ சங்கர், மாவட்ட மகளிர் அணி செயலாளர் சாந்தி கிருஷ்ணன், முடிச்சூர் கிளைத் தலைவர் தியாகராஜன், பொருளாதார பிரிவு மாவட்ட செயலாளர் வெங்கடேசன், விளையாட்டு பிரிவு மாவட்ட செயலாளர் சுபத்ரா, மற்றும் பிஜேபி கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு அம்மா அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி அதனை தொடர்ந்து அதிமுக அலுவலகத்தை திறந்து வைத்தனர்

இந்த நிகழ்ச்சியில் அதிமுக நிர்வாகிகள் குணசேகரன், ராஜேந்திரன், கஜேந்திரன், கணேசன், முருகானந்தன், குமார், நந்தகோபால், யோகேஸ்வர், தீனா, வழக்கறிஞர் சரவணன், விஜய கணேஷ், ஜெயக்குமார், சந்திரசேகர், ராஜா, சிட்டிபாபு, பார்த்திபன், அங்கமுத்து, கோவிந்தராஜ், நந்தகுமார், இ.டி.முருகன், விஷால், சுனில், பரத், தாஸ், விஜி, ராதாகிருஷ்ணன், எஸ்.கார்த்திக், ரமேஷ், ரங்கன், மஞ்சுநாத்,, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் நண்பர்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

இறுதியில் புரட்சி தலைவி அம்மா அவர்களின் 78வது பிறந்த நாளை முன்னிட்டு கேக் வெட்டிக் கொண்டாடினார்கள்



## கிருஷ்ணகிரியில் தானியங்கி ஓட்டுநர் ஓடுதளம் துவக்கம் முதலமைச்சர் காணொளி மூலம் திறப்பு, சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் கொடியசைத்து துவக்கி வைப்பு

கிருஷ்ணகிரி, பிப்.27-

கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தானியங்கி ஓட்டுநர் ஓடுதளத்தை தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக துவக்கி வைத்தார். தொடர்ந்து அலுவலக வளாகத்தில் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் எம் எல் ஏ அவர்கள் கொடி அசைத்து நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சாதனை குரல், வட்டாரப் போக்குவரத்து அலுவலர் ஈஸ்வரமூர்த்தி, வட்டார போக்குவரத்து ஆய்வாளர் செந்தில், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி, கடலரசு மூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ், காவேரிப்பட்டினம் முன்னாள் ஊராட்சி குழு துணை தலைவர் சசிகலா தசரா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மோகன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

புதிய தானியங்கி ஓட்டுநர் ஓடுதளம் மூலம் ஓட்டுநர் தேர்வுகள் நவீன முறையில், வெளிப்படைத் தன்மையுடன் நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.



■ தேசிய முற்போக்கு திராவிட கழகம் (தேமுதிக), திமுக கூட்டணி தொடர்ந்ததையொட்டி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் ரி.ஸி. சின்ராஜ் தலைமையில் அவைத்தலைவர், துணை செயலாளர்கள், பொருளாளர், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் இணைந்து, திமுக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் மரியாதை நிமித்தமாக சந்திப்பு நடத்தினர்.அப்போது பர்கூர் சட்டமன்ற உறுப்பினர்மதியழகன் எம்.எல்.ஏ., அவர்களை நேரில் சந்தித்து கூட்டணி உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடினர்.திமுக மாவட்ட அவை தலைவர் நாகராஜ், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் அன்பரசு உள்ளிட்ட திமுக தேமுதிக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

## பஞ்சாபில் 2 போலீஸார் கொலையில் ஐஎஸ்ஐ தொடர்பு

சண்டிகர், பிப்.27-

பஞ்சாபின் குருதாஸ்பூர் மாவட்டத்தில் இந்தியா பாகிஸ்தான் எல்லைக்கு அருகில் உள்ள அதியன் கிராமத்தில் உதவி சப்இன்ஸ்பெக்டர் குர்னாம் சிங், ஊர்க்காவல் படை வீரர் அசோக் குமார் ஆகிய இருவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பாக போலீஸ் டிஐஜி சந்தீப் கோயல் நேற்று கூறுகையில், "இந்த சம்பவத்தில் திலவார் சிங் (19), ரஞ்சித் சிங் (19) ஆகிய இருவர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் ரஞ்சித் சிங் தப்பிக்க முயன்றபோது நடந்த என்கவுன்ட்டரில் கொல்லப்பட்டார்.

3வது குற்றவாளி இந்தர்ஜித் சிங்கை (21) தேடி வருகிறோம். பாகிஸ்தானின் ஐஎஸ்ஐ உளவு அமைப்பு இந்த சம்பவத்தை அரங்கேற்றியுள்ளது. வெறும் ரூ.20 ஆயிரத்துக்காக இந்தப் படுகொலை நடந்துள்ளது" என்றார்.

## தேனியில் 13 வயது சிறுமிக்கு உயிர் காக்கும் அபூர்வ அறுவை சிகிச்சை மூலம் மதுரை அப்போல சிறப்பு மருத்துவக் குழு சாதனை

தேனி :பிப்.27-

தேனி மாவட்டத் சேர்ந்த 13 வது சிருமி சில நாட்களுக்கு முன்புதேனி காயத்திரி மெடிக்கள்சென்டரில் மதுரை அப்போல் சிறப்பு மருத்துவ மனையின் இரப்பை மற்றும் குடலியல் பாதிப்பு மற்றும் வளர்ச்சி குறைபாடு, சுவாசிப்பதில் சிரமம் காரணமாக சிகிச்சைக்காக வந்து உள்ளார். இந்நிலையில் சிருமியை பரிசோதனை செய்த டாக்டர் ஸ்ரீனிவாசன் ராமசந்திரன். மதுரை அப்போலோ மருத்துவமனைக்கு பரிந்துரை செய்துள்ளார். இந்நிலையில் மதுரை அப்போலோ மருத்துவமனையில் சிருமிக்கு கான்ட்ராஸ்ட் சிடி ஸ்கேன் மூலம் சிருமிக்கு அபெர்னெதி மால்ஃபார்மேசன் என்ற மிக அபூர்வமான நோய் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளன. இந்நிலையில்




கல்லீரலுக்குச் சென்று சுத்திகரிக்கப்பட வேண்டிய இரத்தம் ஒரு அசாதாரண இரத்த நாள இணைப்பு காரணமாக கல்லீரலை தவிர்த்து ( By Pass) நேரடியாக இதயத்திற்கு செல்லுவதால் இந்த நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ள என மருத்துவர் குழுவினர் தெரிவித்துள்ளனர். மேலும் இந்த மாதிரியான நோய் பாதிப்புகள் உலகம் முழுவதும் சுமார் 300 பேருக்கு மட்டும் பாதிப்பு உள்ளதாக மருத்துவ குழுவினர் செய்தியாளர்களுக்கு பேட்டியில் தெரிவித்துள்ளனர்.

மேலும் அறுவை சிகிச்சை மேற்கொண்ட இரப்பை மற்றும் குடலியல் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ஸ்ரீனிவாசன் ராமசந்திரன் கூறுகையில் அபெர்னெதி மால்ஃபார்மேஷன் என்பது மிகவும் அரிதான ஒன்று இதற்கு துல்லியமான திட்டமிடல் மற்றும் நுணுக்கமான அறுவை சிகிச்சை அவசியம். எனவே சரியான நேரத்தில் சிறுமியின் பாதிப்பு கண்டறியப்பட்டு சிறுமியில் கல்லீரலுக்கு செல்லும் இரத்தை ஒட்டத்தை சீரமைத்து சிருமிக்கு எதிர்காலத்தில் ஏற்படகூடிய சிக்கல்களை தவிர்க்க முடிந்தது என தெரிவித்தார்.

அப்போலோ மருத்துவமனையின் தலைமைச் செயல் அதிகாரி டாக்டர் நிகில் திவாரி பேசுகையில் சிக்கலான நோய்களையும் நவீன தொழில்நுட்பம் மற்றும் மருத்துவ நிபுணத்துவத்தைக் கொண்டு குணப்படுத்துவதில் மதுரை அப்போல முன்னிலையில் உள்ளது என கூறினார் மேலும் மருத்துவச் சேவைக்கான இணை இயக்குனர் டாக்டர் கே பிரவீன் ராஜன் கூறுகையில் சிறந்த மருத்துவக் கட்டமைப்பும் பல துறைகளுக்கு இடையே ஒத்துழைப்பும் இது போன்ற வெற்றிக்கு காரணமாக உள்ளன என கூறினார். இந்த செய்தியாளர் சத்திப்பில் அல்போலோ மருத்துவமனை இணை இயக்குனர் டாக்டர் கே.பிரவீன் ராஜன், தலைமைச் செயல் அதிகாரி டாக்டர் நிகில் திவாரி, டாக்டர் ஸ்ரீனிவாசன் ராமசந்திரன், மற்றும் டாக்டர் மதுசூதனன், டாக்டர் வெங்கடேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். இது போன்ற சிசிச்சைக்கு மதுரை அப்போலோ மருத்துவமனையை தொடர்பு கொள்ளவும் என மருத்துவ குழுவினர் தெரிவித்துள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161